**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 4, Issue - 2, May 2025** **E-ISSN: 2583-0481**

# Types of Plants Featured in Kurunthogai

**R. Aarthi,** Full Time Ph.D Scholar, Reg No: 23PHTMF001, Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women,Coimbatore, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0000-2021-5963**
**Dr. M. Geetha,** Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5310-7774**
**DOI: 10.5281/zenodo.15803727**
**Received:** 17 December 2024; **Revised:** 22 February 2025; **Accepted:** 26 March 2025; **Available Online:** 31 May 2025.

## Abstract

*"Kurunthogai" is one of the principal works in Sangam literature. It stands as a rich literary work by encompasses multiple facets of Tamil identity such as culture, tradition, heritage, social life, life amidst nature and ethical life. This work embodies the natural elements that are oriented to that time. Basically, the Tamil people have lived a harmonious life amidst nature. They loved to register in their writings. Especially Sangam works talk about the value of the flora that belongs to the times. There are many references related to the plant kingdom (flora) in the verses of "Kurunthogai" and they are inspiring to emphasize that the people of that time lived in close harmony with nature. The article classifies the tree species, grass species and climber species as found in Kurunthogai. It explains the different plant types as registered in the work "Kurunthogai". The paper has been organized into sub-sections such as tree species, shade-giving trees like the Punnai, the dark-coloured Vengai tree, climbing plants and grass species found in the ancient Sangam Tamil Nadu. Hence, the article provides clear details on the plant species in "Kurunthogai."*

**Keywords:** Sangam Era, *Kurunthogai,* Plants, Trees, Shrubs, Climbers, Ecology.

## References

[1] Kathi Murugesan. "*Sangha Ilakkiyathil Neithal NilaththavaraNgal." Tamil Culture and Literary Research Journal*, Vol. 3, 2024, p. 34.
[2] Karthikeyan, R. *"Thogai Noolgalil Maruthuva Thavaragal." International Research Journal of Tamil*, Vol. 3, Issue 1, 2021, p. 232.
[3] Satheeskumar, M. "*Sangha Ilakkiyangalil Mara Vazhipaattu Muraigal." International Research Journal of Tamil*, Vol. 4, Issue 3, 2022, p. 7.
[4] Devi, R. *Tholkappiya Poruladhikaaram*. Sri Nandhini Publications, Chennai, 2022.
[5] Nagarasan, V. *Kurunthogai*. New Century Book House. Chennai - 600 098, 2004.
[6] Balasubramanian, V. Ku. *Natrinai*, New Century Book House. Chennai - 600 098, 2010.
[7] Vellai Vaaranan, S. *Tholkappiyam Marabiyal Uraivalam*. MKU, Madurai.
[8] "Vengai Maram." *Daily Thanthi*, March 4, 8:40 p.m, 2022.
[9] K. P. Aravaanan. *Ara Elakkiyak Kalanjiyam.* Saradha Pathipagam, Chennai -14, 2010.
[10] M. Arunachalam. *Tamil Elakkiya Varalaru*. Veman Pathipagam, Chennai, 2012.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 4, இதழ் - 2, வைகாசி 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# குறுந்தொகையில் இடம்பெறும் தாவர வகைகள்

**ர. ஆர்த்தி,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 23PHTMF001, தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0000-2021-5963**
**முனைவர் ம. கீதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5310-7774**
**DOI: 10.5281/zenodo.15803727**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்களில் முதன்மை நூலாக விளங்கும் குறுந்தொகை தமிழரின் வாழ்வியல், பண்பாடு, சமூகவியல், இயற்கை, மரபியல் போன்ற பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு பெரும் இலக்கியச் செல்வமாகும். இந்நூல் தமக்கே உரிய இயற்கைப் பண்புகளை மிக நுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் கொண்டுள்ளது. குறிப்பாக, இதன் பாடல்களில் இடம்பெறும் தாவரங்கள் சிந்தனையை அளிப்பதோடு, அக்கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்திருந்தனர் என்பதையும் பதிவுசெய்கின்றது. குறுந்தொகையில் காணப்படும் மரவகைகள், புல்வகைகள், கொடிவகைகள் எனும் வகைப்பாட்டில் குறுந்தொகையில் இடம் பெறும் தாவர வகைகள் என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரை முன்னுரை, தாவரங்கள், தொல்காப்பியர் குறிப்பிடும் தாவரம், மரத் தாவரங்கள், நிழல் தரும் புன்னை, கரிய நிறம் உடைய வேங்கை, கொடித்தாவரங்கள், புல் தாவரங்கள், மான் உண்ணும் அறுகம்புல், தினை புனத்தில் வளரும் அவரைக்கொடி ஆகிய துணைத் தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவில் முடிவுரை இடம்பெறுகின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** சங்க காலம், *குறுந்தொகை*, செடிகள், மரங்கள், குறுஞ்செடிகள், கொடிகள், சூழலியல்.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் இயற்கையை உணர்ந்து ரசிக்கும் ஆழமான பார்வையைக் கொண்டதாகக் குறுந்தொகை காணப்படுகின்றது. இந்நூலில் காதல் உணர்வுகளைச் சித்தரிக்கும் போது இயற்கைச்சூழல் கூறுகளும் அதனுடன் பின்னிப்பிணைந்து வருகின்றது. இச்சூழலில் முக்கியக் கூறாக விளங்குவது தாவரங்கள் ஆகும். தாவரங்கள் காட்சிப்பகுப்பில் மட்டுமல்லாமல், கருத்துப் பதிவிலும், சூழலை விவரிக்கும் தன்மையிலும் முக்கிய இடம் பெறுகின்றது. இக்கட்டுரையின் மூலம் குறுந்தொகையில் இடம்பெறும் தாவர வகைகளைக் குறித்து ஆராய்வதை இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**தாவரங்கள்**

தாவரங்கள் என்பது பூமியில் வாழும் உயிரினங்களுக்கு அவசியமான ஒன்றாகும். இவை ஒளிச்சேர்க்கை (Photosynthesis) எனும் செயல்முறையின் மூலம் கார்பன் டைஆக்ஸைடையும் நீரையும் பயன்படுத்தி ஆக்சிஜனை வெளியிட்டு, உயிரினங்களுக்கு உயிர் வளத்தை வழங்குகின்றன. தாவரங்கள் உணவு சுரப்பதிலும், மருந்தாகவும், அலங்காரத்திற்கும், சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாப்பதற்கும் முக்கியப்பங்கு வகிக்கின்றது. மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிரினங்களும் தாவரங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ சார்ந்திருக்கின்றன.தாவரங்களில் மரங்கள், கொடிகள், புல்கள், பூக்கும் தாவரங்கள், மூலிகைகள், தானிய வகைகள் போன்ற பல பிரிவுகள் உள்ளன. சங்க இலக்கியங்களிலும் தாவரங்கள் உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்து வர்ணிக்கப்படுகின்றது. இன்றைய உலகத்தில் சுற்றுச்சூழல் பாதிப்பு, வனநாசம் போன்றவை அதிகரிக்கும்போது, தாவரங்களைப் பாதுகாப்பது அவசியமாகின்றது. பசுமை வளர்ச்சி, மரக்கன்று நடுகை, இயற்கைச் சூழலின் பாதுகாப்பு ஆகியவை மனிதக் கடமைகளாகவே இருக்கின்றனது. எனவே, தாவரங்கள் என்பது வாழ்க்கையின் அடித்தளமாக விளங்குகின்றது.

**தொல்காப்பியர் கூறும் தாவரம்**

தமிழ்ப் பண்பாட்டு மரபுகளின் மூலஆதாரமாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியத்தில், மொழி, இலக்கணம், மரபுத்தொடர்கள், பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியவற்றுடன் தொடர்புடைய பகுதிகளில் தாவரங்களும் குறிப்பிடப்படுகின்றன. இதனை தொல்காப்பியர்,

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தியாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல். பொருள். அகத்., நூ. 20)**

என்ற நூற்பாவின் மூலம் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் என்னும் எட்டுவகையானக் கருப்பொருள்களில் மரம் என்னும் தாவரம் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிடுகின்றார். இதே போன்று,

**புல்லும் மரனும் ஓரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (தொல். பொருள். மரபு., நூ. 28)**

என்ற நூற்பாவின் மூலம் உயிர்களை ஒன்று முதல் ஆறுவரை அறிவின் அடிப்படையில் பிரித்துள்ளார். அவற்றில் ஓரறிவு உயிர்களாக மரத்தையும் புல்லையும் கூறியுள்ளதைக் காணமுடிகின்றது.

**உலக நாகரிகத்திற்கு முன்னோடியாக விளங்கியவர்கள் தமிழர்கள் என்பதை இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் பகர்கின்றனர் பண்டைய தமிழர்கள் வாழ்ந்துற்ற முல்லை. குறிஞ்சி மருதம், நெய்தல் ஐந்திணைகளில் வாழும் தட்ப வெப்பநில, நீர் காலச்**

**சூழ்நிலைகளுக்கேற்ப புல், செடி கொடி மலர் மரங்கள் என வெவ்வேறு வகையாக வளர்ந்திருந்தன. (கார்த்திகேயன், இரா. பக். 232)**

என்று அவர் தம் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

**மரத்தாவரங்கள்**

சங்க இலக்கியங்களில் மரங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இவை இயற்கையின் அழகையும், மனித உணர்வுகளையும் பிரதிபலிக்கும் முக்கிய உவமைகளாக சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

**ஐந்திணை வகைப்படுத்தலில் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் தனித்தனியான மரங்கள் சிறப்பிற்குரியதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, குறிஞ்சித்திணையில் சந்தனம், அகில், தேக்கு போன்ற மரங்கள், முல்லை திணையில் கொன்றை, குருந்து, காயா போன்ற மரங்கள் காணப்படுகின்றது. இயற்கை பொருட்களில் ஒன்றான மரம் வளரும் உயிர்களில் மிகப்பெரும் ஆற்றலும் சக்தியும் கொண்டது. அத்தகைய மரங்கள் சிலவற்றுள் தெய்வம் குடியிருப்பதாகவும் அவற்றிற்கு தெய்வீக சக்தி இருப்பதாகவும் நம்பினார்கள் அவற்றை வழிபடுவதன் மூலம் எவ்வித தீங்கும் நேராது என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தனர். தெய்வம் உறையும் மரங்களாக ஆலமரம், வேப்பமரம், கடம்பமரம். பனைமரம், வாகைமரம் போன்ற மரங்களை மக்கள் வணங்கியுள்ளனர். இயற்கை தெய்வங்களுக்கும் நடுகல் தெய்வங்களுக்கும் மரங்களின் நிழலில் கோவில்களை நிறுவியும் வழிபட்டுள்ளனர். தெய்வத்தோடு தொடர்புபடுத்தியும் அவற்றிற்கு பலியிட்டும் வழிபாடு செய்து வந்துள்ளார்கள். (மு. சதீஸ்குமார், பக். 7)**

என்று அவர்தம் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

**நிழல் தரும் புன்னை**

புன்னை மரம் தமிழர் வாழ்வியலிலும் இலக்கியத்திலும் முக்கியமான இடத்தைப்பெற்றுள்ளது. இதன் விஞ்ஞானப் பெயர் Calophyllum inophyllum ஆகும். கடற்கரையோரம் அதிகமாக வளரும் இந்த மரம் உயரமாக வளரும் தன்மையைக் கொண்டது. இம்மரம் சிறந்த நிழலைக் கொடுக்கும் மரத்தின் இலைகள் தடித்தும், பச்சை நிறத்துடனும் காணப்படுகின்றன என்பதை,

**அதுகொல் தோழி காம நோயே**
**வதிகுருகு உறங்கும் இன்நிழல் புன்னை**
**உடைதிரைத் திவலை அரும்பும் தீநீர் (குறுந்தொகை, பா. 5)**

என்ற பாடலடிகளின் மூலம் இனிய நிழலைத் தரும் புன்னை மரத்தில் தங்கிய குருகு உறங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் புன்னை மரத்தின் மீது கடலலைகள் வந்து மோதுகின்றன. மோதும் அலைகளால் வீசப்படும் துளிகளால் புன்னையின் அரும்புகள் மலருகின்றன. இத்தகைய

இனிய நீரினையுடைய மென்புலத்துத் தலைவன் என்னைப் பிரிந்தான் என்று தலைவி தோழியிடம் வருந்துகின்றாள். இச்செய்தியின் மூலம் புன்னை மரமானது கடலோரங்களில் அதிகமாக வளரும் என்பதையும் அதிக நிழலினைத் தரும் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**நெய்தல் நிலச் சூழலை ஏற்று வளரும் தாவர இனங்களில் குறிப்பிடத்தக்கது புன்னை. மரத்தின் உறுப்புகளான அடிமரம் கிளைகள் கொம்புகள் கருமை நிறம் உடையவை. (கதி. முருகேசன், பக். 34)**

என்று குறிப்பிடுகின்றார். இதே கருத்தினை,

**அம்ம நாணுதும் நும்மொடு நகையே**
**விருந்தின் பாணர் விளர் இசை கடுப்ப**
**வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்**
**துறை கெழு கொண்க நீ நல்கின்**
**இறைபடு நீழல் பிறவும் ஆர் உளவே (நற்றிணை, பா. 172)**

என்ற பாடலடிகளின் மூலம் தலைவியானவள் சிறுவயதில் விளையாடும் பொழுது புன்னை மரக்கொட்டையை மண்ணிற்க்கடியில் மறைத்து வைத்து விளையாடி அதனை எடுக்க மறந்துவிடுகிறாள். அது முளைத்து வளரத் தொடங்கியது, விளையாட்டுத் தோழியர்கள் அதனை உன் அக்கா என்று சொல்லி வைத்தனர். எனவே அந்த தலைவி தனக்குப் பருக தரும் பாலை தினமும் ஊற்றி அதனை வளர்த்து வந்தாள்.அந்தப் புன்னை மரநிழலில் தலைவன் அவளைப் புணர நினைக்கிறான். ஆனால் தலைவியானவள் அப்புன்னைமரமானது எனக்கு தமக்கை போன்று,வேறு நிழலுக்கு செல்வோம் என்று கூறுகிறாள். இதன் மூலம் சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பது இங்கு புலனாகின்றது.

**கரிய நிறமுடைய வேங்கை**

வேங்கை மரம் என்பது தமிழ் இலக்கியத்தில் அதிகம் புகழப்பட்ட ஒரு மரமாகும். இதன் அறிவியல் பெயர் ‘Pterocarpus marsupium’ ஆகும். இது தென்னிந்திய வனங்களில் காணப்படும் மிகவும் வலிமையான மரமாகும். வேங்கை மரம் தமிழரின் இயற்கை வாழ்வியலிலும், இலக்கியத்திலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இந்த மரம் உயரமாக வளரக்கூடியது. அதன் கிளைகள் பரந்து விரிந்த அடர்த்தியுடையதாகவும் அதனுடைய பட்டை கனமாகவும், கரிய நிறத்துடன் கூடியதாகவும் காணப்படும்.

**வேங்கை மரம் 30 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. இதன் இலைகள் ஐந்து கூட்டு இலைகளைக் கொண்ட கொத்தாக இருக்கும். இலைநுனி வளைந்திருக்கும். மரத்தின் பால் கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். (வேங்கை மரம்)**

அரும்புகள் அனைத்தும் மலர்ந்த, கரிய அடிப்பக்கத்தையுடைய வேங்கை மரத்தின்மேல் வளர்ந்த பெரிய கிளையில், இருந்த மயிலானது, அதன் மலரைக் கொய்யும் மகளிரைப் போலக்

காட்சி அளித்தது என்ற செய்தியின் மூலம் வேங்கை மரமானது கரியநிறம் உடையதாகும் என்பதை,

**அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை**
**மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை**
**பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன் (குறுந்தொகை, பா. 26)**

என்ற பாடலாடிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**கொடித்தாவரங்கள்**

கொடி வகை தாவரங்கள் அல்லது கொடித்தாவரங்கள் (Climbers or Vines) என்பது தாங்களாக நிலத்தில் செழித்து வளர முடியாமல், வேறு தாவரங்கள் அல்லது உடற்கட்டமைப்புகளின் உதவியுடன் மேலே செல்வதற்காக ஏறிப் பிடித்து வளரும் தாவரங்களாகும். இவை தாங்கள் வளர்ந்து செல்லும் வழியில் ஏதும் ஆதரவாக இருந்தால் அதனைச் சுற்றிச் சுருண்டு அல்லது ஒட்டி வளர்கின்றன.

**திணை புனத்தில் வளரும் அவரைக்கொடி**

அவரை கொடி என்பது தமிழர் பழம்பெரும் பண்பாட்டில் குறிப்பிடப்படும் ஒரு முக்கியமான கொடிவகைத் தாவரமாகும். இது பெரும்பாலும் வயல்வெளிகளில் மற்றும் இயற்கை சூழல்களில் படர்ந்து வளரும் தன்மை கொண்டது. நிலத்தில் பரவி வளர்கின்ற இந்தக் கொடி, எளிமையையும், இயற்கையின் நெருக்கத்தையும் பிரதிபலிக்கின்றது. இதன் இலைகள் பசுமை நிறமுடையதாகவும், மருத்துவ குணங்கள் வாய்ந்ததாகவும் இருக்கின்றன. குறிப்பாக உடல் வெப்பத்தைக் குறைக்கும் தன்மையால் இந்த இலைகள் மூலிகை மருத்துவத்தில் பயன்படுகின்றன என்பதை,

**வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்பு**
**அழாஅல் என்றுநம் அழுதகண் துடைப்பார்**
**யாரா குவர்கொல் தோழி சாரற்**
**பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்**
**கொழுங்கொடி அவரை பூக்கும்**
**அரும்பனி அச்சிரம் வாரா தோரே (குறுந்தொகை, பா. 82)**

என்ற பாடலின் மூலம் மலைப்பக்கத்தில் குறவனது பெரிய திணைப்புனத்தில், முதலில் விளைத்த தினைய அறுவடை செய்தபின், அதன் மறுகால் பயிருனூடே செழிப்பாக வளர்ந்துள்ள அவரைக் கொடிபூக்கும் என்பதை அறிய முடிகின்றது. மேலும், இதே செய்தியினை,

**நிலம் நீர் ஆர, குன்றம் குழைப்ப,**
**அகல் வாய்ப் பைஞ் சுனைப் பயிர் கால்யாப்ப,**
**குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர்**

**நறுங் காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப**
**பெரும் பெயல் பொழிந்த தொழில எழிலி**
**தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்,**
**அரிதே, காதலர்ப் பிரிதல்-இன்று செல்**
**இளையர்த் தரூஉம் வாடையொடு**
**மயங்கு இதழ் மழைக் கண் பயந்த, தூதே (நற்றிணை, பா. 5)**

என்ற பாடலின் மூலம் மழைக்காலத்தில் நிலம் நீரை பருகும், குன்றம் தழைக்கும், அகன்ற வாயை உடைய சுனைகளின் நீர் பூ, பயிர், கால் கொள்ளும், குறவர்கள் வெட்டி போட்ட நரவங்கொடி மீண்டும் தழைத்து சந்தன மரத்தைச் சுற்றிக்கொண்டு ஏறித் துளிர்விடும் என்ற செய்தியை அறிந்து கொள்ள முடிகின்றது.

நெருஞ்சிக் கொடியில் பூக்கும் மலரானது சூரியன் எந்த திசையில் இயங்குமோ அந்த திசையைப் பார்த்து தானும் இயங்கும். சூரியகாந்தி மலரைப் போல தலைவியின் மணமானது தலைவனை பார்த்தே இயங்கும் என்ற செய்தியினை,

**எழுதரு மதியங் கடற்கண் டாஅங்**
**கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்**
**ஞாயி றனையன் தோழி**
**நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே (குறுந்தொகை, பா. 315)**

என்ற பாடலடிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**புல் தாவரம்**

புல் தாவரங்கள் என்பது இயற்கையில் மிக முக்கியமான இடத்தைப் பெற்ற தாவர வகையாகும். இவை பொதுவாக குலைமருதம் குடும்பத்தைச் சேர்ந்தவை. நெல், கோதுமை, மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு போன்ற தானியங்கள் புல் தாவர வகைகளில் அடங்கும். இவை மனிதனின் முதன்மை உணவாக விளங்குகின்றன. புல் தாவரங்கள் தாழ்வான செடிகளாகவும், சில நேரங்களில் உயரமாகவும் வளரக்கூடியவை. இவை உலகின் பல பகுதிகளில் பரவலாக காணப்படும். பசுமை வயல்களின் அழகையும், பசுமை நிலத்தின் வளத்தையும் புல் தாவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவை நிலத்தினை ஊறுதலுக்கும் காடுகளின் உருவாக்கத்திற்கும் முக்கிய பங்கு வகிக்கின்றன. புல் தாவரங்கள் காலநிலை மாற்றத்திற்கு சிறந்த எதிர்ப்பு சக்தியை வழங்குகின்றன. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை மிருகங்களுக்கும், மனிதனுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உணவாக பயன்படுவதைக் காணமுடிகின்றது.

**மான் உண்ணும் அறுகம்புல்**

அறுகம்புல் என்பது தமிழரின் பாரம்பரியத் தாவரங்களில் சிறப்பிடம் பெற்ற ஒரு புல்வகைத் தாவரமாகும். இது ஆறு மடங்குகள் கொண்ட கம்பு போன்ற அமைப்பால் **"அறு** +

**கம்பு + புல்"** என அழைக்கப்படுகிறது. இந்தப் புல் பொதுவாக காடுகளிலும், பசுமை நிறைந்த இடங்களில் இயற்கையாக வளரும் தன்மை கொண்டது. மிகவும் உறுதியான வேரமைப்பைக் கொண்ட அறுகம்புல், வறண்ட சூழ்நிலைகளிலும் தழைத்தெழும் சக்தியுடையது. இதனை விலங்குகள் விரும்பி உண்ணும் என்பதை,

**மணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகை**
**பிணிகால் மென்கொம்பு பிணையொடு மார்ந்த**
**மானே றுகளுங் கானம் பிற்பட**
**வினைநலம் படீஇ வருது மவ்வரைத்**
**தாங்கல் ஒல்லுமோ பூங்குழை யோயெனச்**
**சொல்லா முன்னர் நில்லா வாகி**
**நீர்விலங் கழுத லானா**
**தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே. (குறுந்தொகை, பா. 256)**

என்ற பாடலின் மூலம் நீலமணி நீண்டு கிடப்பதைப் போன்ற கரிய நிறக்கொடியாகிய அறுகின் பின்னிக் கொண்டுள்ள மெல்லிய தண்டை, பெண்மானோடு சேர்ந்து வயிறு நிரம்ப உண்ட, ஆண்மான் துள்ளுகின்ற கார்காலம் வருவதற்கு முன்பே, காட்டைக் கடந்து சென்று பொருள் தேடுவதிலே வெற்றி பெற்றுத் திரும்பி வருவான் தலைவன் என்ற செய்தியின் மூலம் அறிய முடிகின்றது.

**முடிவுரை**

தமிழரின் பன்முகமான வாழ்வியல் அடையாளங்களை இயற்கையின் வழியாக வெளிப்படுத்தும் ஒரு பெட்டகமாக குறுந்தொகை அமைகின்றது. இந்நூலில் இடம் பெறும் தாவரங்களான மரங்கள், கொடிகள், புல்கள் மற்றும் நிழல் தரும் செடிகள், வெறும் புறநிலைச் சித்தரிப்புகள் அல்லாமல். அவை காதல், காத்திருப்பு, தவிப்பு, பொறுமை, நம்பிக்கை போன்ற உணர்வுகளை நேரடியாகவும், உருவக ரீதியிலும் வெளிப்படுத்துகின்ற நிலையினையும், இவை நிலப்பகுதிகளோடு இணைந்த மனித வாழ்வியலை நுண்ணறிவுடன் எடுத்துரைக்கும் விதத்தினையும் இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**குறிப்புகள்**

[1] கதி. முருகேசன். "சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத்தாவரங்கள்." *தமிழ் பண்பாடு மற்றும் இலக்கிய ஆய்விதழ்*, தொகுதி. 3, 2024 . பக். 34.

[2] கார்த்திகேயன், இரா. "*தொகை நூல்களில் மருத்துவ தாவரங்கள்.*" *சர்வதேச தமிழ் ஆய்விதழ்*, தொகுதி. 3 இதழ் 1, 2021 . பக். 232.

[3] சதீஸ்குமார், மு. "*சங்க இலக்கியங்களில் மர வழிபாட்டு முறைகள்.*" *சர்வதேச தமிழ் ஆய்விதழ்*, தொகுதி. 4 இதழ் 3, 2022. பக். 7.

[4] தேவி, இரா. *தொல்காப்பிய பொருளதிகாரம்.* ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை, 2022.

[5] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை - 600 098, 2004.

[6] பாலசுப்பிரமணியன், வெ.கு. *நற்றிணை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை- 600 098, 2010.

[7] வெள்ளை வாரணன், க. *தொல்காப்பியம் மரபியல் உரைவளம்*. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1994.

[8] வேங்கை மரம்." *தினத்தந்தி*, மார்ச் 4, 8:40 p.m, 2022.

[9] கே. பி. அரவாணன். அற இலக்கியக் களஞ்சியம். சாரதா பதிப்பகம், சென்னை-14, 2010.

[10] எம். அருணாசலம். தமிழ் இலக்கிய வரலாறு. வேமன் பதிப்பகம், சென்னை, 2012.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.